www.tamilarangam.net






## வெள்ளி, 15 மே, 2009

### ஈழத்தமிழர்களுக்கு உதவ தயார்: அமெரிக்க கடற்படை

இலங்கையின் முல்லைத்தீவில் போர் பகுதியில் சிக்கியிருக்கும் ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழர்களுக்கு தேவையான உணவு, மருந்து உள்ளிட்ட உடனடி நிவாரண பொருட்களை வழங்குவதற்கு அமெரிக்க கடற்படை திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து டெல்லியில் அமெரிக்க தளபதி அட்மிரல் திமோத்தி ஜே சீட்டிங் கூறுகையில்,

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு அமெரிக்க குழு ஒன்று இலங்கைக்கு சென்று அங்குள்ள நிலவரத்தை மதிப்பிட்டு போர் பகுதியில் சிக்கியிருக்கும் தமிழர்களுக்கு உதவுவதற்கான வழிமுறைகள் அடங்கிய அறிக்கையை அமெரிக்க அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது என்றார்.

நாங்கள் எங்கள் வெளியுறவுத்துறைக்கு இலங்கையில் உள்ள அமெரிக்க தூதர் மூலமாக அறிக்கை சமர்ப்பித்தோம். அதில் போர் பகுதியில் சிக்கியிருக்கும் தமிழர்களுக்கு உதவுவதற்கான பல்வேறு வழிமுறைகளை தெரிவித்துள்ளோம். ஆனால் அதில் எதுவும் இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்று கூறினார்.

*இடுகையிட்டது Tamilkumaran நேரம்* ***3:44 am***

*0 கருத்துரைகள்:*

*கருத்துரையிடுக*

**இவ்வாறு கருத்துரையிடு:**